# உடல்நல பாதிப்பின் மதிப்பீடுகள் – ஒரு அறிமுகம்

https://youtu.be/Fe59CxyttNk?feature=shared **(ஆங்கிலத்தில்)**

வணக்கம், எனது பெயர் லிண்ட்சே, உடல்நல பாதிப்பின் மதிப்பீடுகளை (அல்லது H-I-Rக்கள்) எழுதும் குழுவில் நானும் அங்கம் வகிக்கிறேன். HIR-இன் நோக்கம், வாஷிங்டன் மாகாணத்தில் ஒரு மசோதா அல்லது பட்ஜெட் திட்ட அறிக்கையை இயற்றும்போது, அது எவ்வாறு மக்களின் உடல்நலம் மற்றும் அவர்களின் சமத்துவத்தைப் பாதிக்கின்றது என்பதைத் தீர்மானிப்பதற்கான ஆதாரங்களைப் பயன்படுத்தும் பாரபட்சமற்ற ஒரு பகுப்பாய்வை மேற்கொள்வதாகும். முடிவு செய்பவர்களுக்கு, உடல்நலம் மற்றும் சமத்துவப் பார்வையிலிருந்து கொள்கை சார்ந்த தகவல்களை HIR வழங்குகின்றன.

எந்தவொரு வாஷிங்டன் மாகாண சட்டமன்ற உறுப்பினரும் அல்லது ஆளுநரும் ஒரு HIR வேண்டுமென்று கோரலாம், மேலும் திட்ட அறிக்கை ஒரு சட்டமாக நிறைவேறாத வரை அவை எந்தவொரு கொள்கைத் தலைப்பிலும் நிறைவு செய்யப்படலாம். சட்டப் பேரவைக் கூட்டத் தொடரின் போது 10 நாட்களில் HIR நிறைவு செய்யப்பட வேண்டும், மேலும் சட்டமன்றம் கூட்டத் தொடர் இல்லாத நேரத்தில் நிறைவுசெய்யும் காலத்திற்கான நெகிழ்வுத்தன்மை நமக்கு உள்ளது.

சட்டமன்ற உறுப்பினர்கள் பல HIR-க்களைக் கோரலாம். சில சட்டமன்ற உறுப்பினர்கள், ஒரு திட்ட அறிக்கை சட்டமாக மாறினால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றி அறிய, சக ஊழியர்களுடன் ஒரு திட்ட அறிக்கையைப் பற்றி விவாதிக்க, அல்லது அதில் மாற்றங்களைச் செய்ய HIR மூலம் கண்டறிந்தவைகளை பயன்படுத்தலாம்.

நிறைவுசெய்யப்பட்ட அனைத்து HIR-க்களும் மாகாண சுகாதார வாரியத்தின் இணையதளத்தில் உள்ளன.

கூடுதல் தகவல்களுக்கு, www.sboh.wa.gov/hir (ஆங்கிலத்தில்)-ஐப் பார்வையிடவும்.